**தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை - 2010**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 அபிப்பிராயம்

-------------------

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியுள்ளது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

#### 1.2.1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

-------------------------------------------------------

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 442,996 கூட்டுத்தொகையான முன்னைய ஆண்டிற்கான சீராக்கம், மீளாய்வாண்டின் வருமான செலவுக் கணக்கிற்கு சீராக்கப்பட வேண்டிய போதிலும், அதனை முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கில் காண்பித்து முன்னைய ஆண்டின் இலாப நட்டக் கணக்கின் திரண்ட மீதிக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 வரையில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பனவற்றுடன் இணங்காமை

---

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரபை அதிகாரச்சட்டம் 19(3) ஆம் பிரிவு | குறித்த நியதிகளின் பிரகாரம் அதிகார சபையால் தொழிநுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை தாபிக்கப்படுவதற்கு தேவைப்பட்ட உரிய நிதி ஏற்பாட்டையும் தொழிநுட்ப அபிவிருத்தி செயற்பாட்டிற்காக ஒதுக்கப்படுகின்ற அல்லது கிடைக்கப் பெறுகின்ற சகல நிதிகளும் உரிய நிதியத்திற்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், அந் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5:1:3 ஆம் பந்தி | அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் நாளதுவரையாக்கப் பட்ட கூட்டுத் திட்டத்தின் பிரதியையும் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரதியொன்றையும் மீளாய்வாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வேற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | அரசாங்க நிதிப்பிரமாணம் | |
| | நி.பி.133 (1)(அ) | ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கெள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 1,799,967 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் ரூபா 838,478 மிகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 2,638,445 குறைவிற்காக மீண்டுவரும் மானியம் ரூபா 3,768,000 குறைந்தமையும் மொத்த செலவினம் ரூபா 7,705,660 ஆல் அதிகரித்தமையும் நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது.

### 2.1.2 நிதி நிலைமை

அதிகாரசபையின் மூலதனம் ரூபா 3,918,079 ஆல் அதிகரித்திருந்ததுடன், அதற்காக தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 5,183,476 ஆல் அதிகரித்தமையும் ஆரம்ப திரண்ட நட்டம் ரூபா 7,152,042 ஆல் குறைவடைந்தமையும் தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பதவியணிக்கான செலவினம் ரூபா 2,690,343 ஆலும் பிரயாணச் செலவினம் ரூபா 519,078 ஆலும் உட்பட மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 7,705,560 ஆல் அதிகரித்திருந்த போதிலும், 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள செயலாற்றல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வளங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த முறையை உறுதிப்படுத்துவதற்கு முகாமை தவறியிருந்தது.

(அ) முயற்சிகள் அபிவிருத்தி, ஊக்குவித்தல், மேம்படுத்தல் வசதிகளை வழங்குவதின் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல்.

(ஆ) சர்வதேச சந்தைகளைக் கைப்பற்றுதல்

(இ) கைத்தொழில் மற்றும் விவசாயக் கைத்தொழில் வியாபார அபிவிருத்திக்கு சிறப்பாக உதவிபுரிதல்

(ஈ) தொழிநுட்ப நிபுணத்துவத்துடனான மனித மூலதன அபிவிருத்தி ஊடாக மக்கள் வலுவூட்டுதல்

(ஈ) அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

(உ) முயற்சி அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தேவையான வசதிகளுக்காக வழிகளை செய்து கொடுத்தல்

(ஊ) அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக தொழிநுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை தாபித்தல்.

**2.2.2 கட்டிட வாடகை**

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,313,564 தொகையான அட்டுறு கட்டிட வாடகையை தொழில் முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.2.3. பாதீட்டுக் கட்டுப்பாடு**

2010 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட செலவினம், மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றிற்கு இடையே பாரிய முரண்கள் காணப்பட்டதால் அதிகாரசபை பாதீட்டினை சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு முகாமை தவறியிருந்தமையைக் காட்டுகிறது.

## 3. முறைமைகளும் கட்டுபாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு